**சுருக்கம்**

தொழில் துறை – தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் – காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அருகில் மருத்துவப்பூங்கா அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஐ.இ.1)துறை**

**அரசாணை (டி) எண் 118** **நாள்: 4.8.2014**
**ஜய, ஆடி 19,**
**திருவள்ளுவர் ஆண்டு –2045**

**படிக்கப்பட்டது:**

1. மேலாண் இயக்குநர், டிட்கோ, கடிதம் எண்.டி.பொமே (ரா)/ எச்எல்சிஎல்/2012, நாள் 10.09.2012.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு த.நா.ச.பே.எண்.009, நாள் 24.07.2014

****

**ஆணை:**

24.07.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் தொழில் வளர்ச்சி திட்டம் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:

> "மருத்துவ உபகரணங்கள் தயாரிப்புத் துறையில் இந்தியாவின் மையமாக தமிழ்நாட்டினை உருவாக்கும் பொருட்டும், மருத்துவ தொழில்நுட்பத் துறையில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டும், மருத்துவ தொழில்நுட்பத் தயாரிப்புகளின் இறக்குமதியை குறைத்து அதன் மூலம் மருத்துவச் செலவைக் குறைக்கும் நோக்கிலும், எச்.எல்.எல். லைப்கேர் லிமிடெட் என்கிற ஓர் இந்திய அரசு நிறுவனத்துடன் இணைந்து காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அருகில் 330 ஏக்கர் நிலபரப்பில் 130 கோடி ரூபாய் திட்ட செலவில் ஒரு மருத்துவப் பூங்கா டிட்கோ நிறுவனத்தால் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மருத்துவப் பூங்கா இந்திய நாட்டில் முதன்மையான மருத்துவப் பூங்காவாக அமைவதோடு, மருத்துவ கருவிகள் மற்றும் உபகரணங்கள் மண்டலம், உயிரி தொழில்நுட்பம், உயிரி தகவல் மண்டலம், அடைகாப்பு வசதி மற்றும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி மண்டலம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் கொண்டதாகவும் அமையும்.

இப்பூங்காவில் அமைக்கப்படவுள்ள 100 தொழில் பிரிவுகளில், 30 தொழில் பிரிவுகள் பெரிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்காக அமைக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் சுமார் 3000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், சுமார் 5000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் ஏற்படும் ".

2. மேற்குறிப்பிட்ட மருத்துவப் பூங்கா திட்டத்தில் முதலீடு செய்வதற்குமுன் திட்ட முதலீட்டுக் குழுவின் முன் அனுமதியினை டிட்கோ நிறுவனம் பெற வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இம்மருத்துவப் பூங்கா திட்டத்தினை செங்கல்பட்டிற்கு அருகில் டிட்கோ நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்த, கூட்டுமுயற்சி திட்ட சகதொழில்மேம்பாட்டாளராக திருவாளர்கள் எச்.எல்.எல் லைஃப்கேர் லிமிடெட் நிறுவனத்தினை (எச்.எல்.எல் நிறுவனம்) தெரிவு செய்வதற்கு டிட்கோ நிறுவனத்திற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. மேற்குறிப்பிட்ட தொழில் திட்டத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்பவும் டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநருக்கு அறிவுறுத்தி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. வி. சங்கர்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
டிட்கோ,
19–ஏ, ருக்மணி –இலட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
நகல்
முதலமைச்சரின் அலுவலகம்,
சென்னை –9.
தொழில்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை –9
தொழில் (வசெதி) துறை, சென்னை – 600 009.
தொழில் (அநமு.2) துறை, சென்னை – 600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சி. சிவாஜிபாஸ்கர்
4.8.2014
பிரிவு அலுவலர்
கோசபா
4.8.2014